சுருக்கம்

காவல் – பணியமைப்பு – கருணை அடிப்படையில் பணிநியமனம் – 1562 தகவல் பதிவு உதவியாளர்/காவல் நிலைய வரவேற்பாளர் (Data Entry Assistant/ Receptionist) பணியாளர்களுக்கு சீருடை வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உள் (காவல்-15) துறை

அரசாணை (நிலை) எண்.46

நாள் 03.02.2023
சுபகிருது வருடம்
தை திங்கள் 20 -ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு – 2054

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.406, உள் (காவல்-15) துறை, நாள் 17.10.2022.
2. அரசாணை (நிலை) எண்.203, உள் (காவல்-15) துறை, நாள் 22.04.2022.
3. அரசாணை (நிலை) எண்.484, உள் (காவல்-15) துறை, நாள் 12.09.2022.
4. காவல்துறை தலைமை இயக்குநர் ந.க.எண். 728720/ சி.ஏ.1/2022, நாள் 15.09.2022.

----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 1562 தகவல் பதிவு உதவியாளர்/காவல் நிலைய வரவேற்பாளர் (Data Entry Assistant/ Receptionist) பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு,

அப்பணியிடங்களில் தகவல் பதிவு உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, காவல் நிலையங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

2. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் காவல் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பணியிடங்களுக்கு பணிநியமனம் பெற காத்திருப்போர் பட்டியலில் உள்ள 1132 நபர்களுக்கு தகவல் பதிவு உதவியாளர் / காவல் நிலைய வரவேற்பாளர் (Data Entry Assistant / Receptionist) பணியிடங்கள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டு, மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 1132 காவல் நிலைய வரவேற்பாளர்களுக்கு சீருடை, தையல் கூலி மற்றும் காலணி வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.31,32,244/-ஐ ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. காவல்துறை தலைமை இயக்குநர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.406, உள் (காவல் 15) துறை, நாள் 17.10.2020-ல் தெரிவித்துள்ளபடி 1562 இரண்டாம் நிலை காவலர் பதவிகளை இருப்பில் வைத்து (Kept in abeyance) 1562 தகவல் பதிவு உதவியாளர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு ஏற்கனவே காவல் நிலையங்களில் பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட 1562 தகவல் பதிவு உதவியாளர்களுக்கு சீருடை, தையல் கூலி மற்றும் காலணி வழங்கும்பொருட்டு ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்கு ரூ.2,767/- வீதம் மொத்த தொகை ரூ.43,22,054/- தேவைப்படுகிறது என்று தெரிவித்துள்ளார். காவல்நிலைய வரவேற்பாளர்கள் சீருடை செலவு விவரம் பின்வருமாறு:-

ஆண்கள்:

| Sl. No. | Uniform articles | Rate (Rs.) | Per Year (Rs.) |
|---|---|---|---|
| 1. | Cream Colour Shirt (Full hand)<br>Brown Colour Pant (2 sets) | 1044 | 1044 |
| 2. | Stitching Charges (2 sets) | 500/set | 1000 |
| 3. | Shoe (1 pair) and shocks | 706+17 | 723 |
| | Total | | 2767 |

பெண்கள்

| Sl. No. | Uniform articles | Rate (Rs.) | Per Year (Rs.) |
|---|---|---|---|
| 1. | Cream Colour Tops (Churidhar)<br>Brown Colour Pant (2 sets)<br>Brown Colour Shawl<br>(or)<br>Cream Colour Saree<br>Brown Colour blouse<br>With closed neck (2 sets) | 1044 | 1044 |
| 2. | Stitching Charges (2 sets) | 500/set | 1000 |
| 3. | Shoe (1 pair) and shocks | 706+17 | 723 |
| | Total | | 2767 |

மொத்த செலவினம்: 1562 x 2767/- = Rs.43,22,054/-

மேலும், மேற்கண்ட காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்கள் இரண்டாம் நிலை காவலர் பதவிகளை இருப்பில் வைத்து (Kept in abeyance) பெறப்படுவதால் சீருடை வழங்குவதில் அரசுக்கு நிதி இழப்பு எதுவும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், 1562 காவல் நிலைய வரவேற்பாளர்களுக்கு சீருடை, தையல் கூலி மற்றும் காலணி வழங்குவதற்கு ஆகும் மொத்த செலவுத்தொகையை ரூ.43,22,054/- (ரூபாய் நாற்பத்தி மூன்று இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து ஐம்பத்தி நான்கு மட்டும்). காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக பண்டகப்பிரிவின் மூலம் பணமாக பெறுவதற்கு ஆணை வழங்குமாறு காவல்துறை தலைமை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. காவல் துறை தலைமை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) 1562 காவல் நிலைய வரவேற்பாளர்களுக்கு சீருடை, தையல் கூலி மற்றும் காலணி வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.43,22,054/-ஐ (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து இருபத்தியிரண்டாயிரத்து ஐம்பத்து நான்கு

மட்டும்) BE 2022-2023-ல் தொடர்புடைய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) மேலும், தற்போது காவலர்களுக்கு (நிலை-II) சீருடை வழங்கப்பட்டுவரும் நடைமுறையை பின்பற்றி மேற்படி காவல்நிலைய வரவேற்பாளர்களுக்கு சீருடை வழங்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.பணீந்திர ரெட்டி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
காவல் துறை தலைமை இயக்குநர்/
தலைமை காவல் படை, சென்னை – 4.

<u>நகல்:</u>
நிதித்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/2/2023
பிரிவு அலுவலர்
3/2/2023